ஆண்டு சந்தா ரூ. 60/-

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 6 இதழ் : 3 ஜனவரி 2010





# உங்கள் சகோதரனிடமிருந்து....

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

கடந்த 2009ம் ஆண்டு முழுவதும் அற்புதமாகவும், ஆசீர்வாதமாகவும் நடத்தி வந்த சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு நாம் ஸ்தோத்திரங்களையும் துதிகளையும் ஏறெடுப்போம். நிச்சயமாகவே தேவன் நமக்கு தந்த தரிசனபணியான இந்த பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் சுவிஷேச பணியில் தேவன் மிகப்பெரிய காரியங்களைச் செய்தபடியால் தேவனைத் துதிக்கிறோம். 2009–ம் ஆண்டு தேவன் நடப்பித்த கிரியைகளை அடுத்த மலரில் எழுத பிரயாசப்படுகிறோம். மேலும் உங்கள் யாவரின் அன்புக்காகவும், பாரமுள்ள ஜெபத்திற்காகவும், தியாகமான ஆதரவுக்காகவும் தேவனைத் துதித்து உங்களுக்கு நன்றி கூறுகிறோம்.

2010ம் ஆண்டு தேவ ஜனங்களை தேவன் அபரிதமாக ஆசீர்வதிக்கும் ஒரு ஆண்டாக விளங்கும். அவர் நாமம் தரிக்கப்பட்ட ஜனங்களுக்கும், மற்றவர்களுக்கும் வித்தியாசத்தை தேவன் விளங்கப்பண்ணுவார். சபைகளும், ஊழியர்களும், ஊழியங்களும் பெருகும். இயேசுவின் நாமம் மேலான நாமமாக தேசத்தில் உயர்த்தப்படும். தேசமெங்கும் தேவன் திறந்த வாசலை சபைகளுக்காகவும் ஊழியங்களுக்காகவும் தருகிறார். மேலும் பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் மூலமாக அற்புத அடையாளங்கள் ஒவ்வொரு சபைகளிலும், ஊழியங்களிலும் பெருகும். எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவின் நாமம் தேசத்தில் மகிமைப்படும். தேவன் தந்த வாக்கின்படியே அவர் நம் தேவனாக இருப்பதை அநேகர் காண்பார்கள்.

2010ம் வருடத்தில் 1000 சபைகள் 1000 பீல் சுதேச ஊழியர்கள், 10,000 மூப்பர்கள் உருவாக்கும் திட்டப்பணியில் ஜெபித்து கரம் கொடுக்க வேண்டுகிறேன். பீல் மக்கள் மத்தியில் Shalom Diocese in India – சபை ஊழியம், Sharing Love Mission – பீல் மக்கள் மத்தியில் மிஷனெரிப்பணி, Shalom Charity Mission – பீல் மக்கள் மத்தியில் கல்வி, சமூக, பொருளாதார வளர்ச்சிப் பணிகள் இவைகளை தேவ பெலனுடன் நிறைவேற்ற எங்களை குடும்பமாக அர்ப்பணிக்கிறோம். குஜராத் பணித்தள அலுவலக ஊழியர்கள், தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்கள், ஷாலோம் முன்னேற்றப்பணி ஊழியர்கள் மற்றும் ஷாலோம் ஊழிய பிரதிநிதிகள் மற்றும் ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் யாவருக்காகவும் ஜெபியுங்கள். குறிப்பாக எங்களது பிள்ளைகள் Titus MBA- I Year, Shalom B.Tech- III Year, Joy Shekinah 12th-Std. இவர்களுக்காக ஜெபியுங்கள்.

உங்களுக்காக நாங்கள் யாவரும் ஜெபித்து வருகிறோம். எங்கள் குடும்பத்தின் சார்பிலும் ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் சார்பிலும் பணித்தள அலுவலகம், தலைமை அலுவலகம் சார்பிலும் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்களை கூறுகிறோம்.

**நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்.**

எரேமியா 30:22

*தேவ அறுவடைபணியில் உங்கள் அன்பு சகோதரன்*

V. Devadass

(Rt. Rev. Dr. V. Devadass)

# நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்”

புத்தாண்டு சிறப்புச் செய்தி : **Rt. Rev. Dr. V. தேவதாஸ்**

**“நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்”.**

**எரேமியா 30:22**

கிறிஸ்துவுக்குள் மிக அன்பான ஷாலோம் ஜெப பங்காளர்கள் மற்றும் இந்த மலரை வாசிக்கும் உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் அன்பு புத்தாண்டு வாழ்த்துக்கள்.

புதிய ஆண்டில் பிரவேசிக்க தேவன் தந்த கிருபைக்காக தேவனை துதிப்போம். இந்த புதிய ஆண்டில் தேவன்தாமே தம் ஜனங்களாகிய நம்மை அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக! இந்த புதிய வருட ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தபோது தேவன் மிக ஆசீர்வாதமான வாக்குத்தத்தத்தை தந்தார். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். நான் உங்கள் தேவனாயிருப்பேன் என்பதுதான் அந்த வாக்குத்தத்தம். எரேமியா தீர்க்கதரிசன புத்தகத்தில் 30, 31 அதிகாரங்களை தியானிக்கும்போது தேவன் நம்மை அவருடைய ஜனங்களாக ஏற்றுக்கொள்ளும்போது என்னென்ன ஆசீர்வாதங்களை கட்டளையிடுகிறார் என்பதை தியானிப்போம்.

**1. உன் கட்டுகளை அறுப்பேன்:**

தேவன் நம்முடைய ஜனங்களாய் நம்மை ஏற்றுக்கொள்வது எவ்வளவு பெரிதான ஆசீர்வாதமாக உள்ளது. முதலாவது தேவன் தம் ஜனங்கள் மீதுள்ள கட்டுகளை அறுக்கிறார். எரேமியா 30:8–ஐ வாசித்துபாருங்கள். “அந்நாளில் நான் உன் நுகத்தை உன் கழுத்தின்மேல் இராதபடிக்கு உடைத்து, உன் கட்டுகளை அறுப்பேன்” என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அந்நியர் இனி அவனை அடிமை கொள்வதில்லை. தேவன் தம்முடைய ஜனங்களாய் மாற்றவேண்டுமானால் முதலாவது அவர் தம் ஜனங்களின் மீதுள்ள கட்டுகளை அறுக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களை மீட்டு கானான் தேசத்தை கொடுக்கிறார். வல்லமையுள்ள தேவன் இறங்கி வந்து ஓரேப் பர்வதத்தில் மோசேயை சந்தித்தபோது மோசேயிடம் முதலாவது நான் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொள்வேன் என்று வாக்குரைத்தார். அதன்படி பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்ட அந்த இரவில் மாபெரும் இரட்சிப்பை

கட்டளையிட்டார். புதிய ஏற்பாட்டில் தேவன் நம்மை பாவங்கள், சாபங்கள் ஆகிய கட்டுகளிலிருந்து விடுவிக்க தம்முடைய ஒரே பேரான குமாரன் இயேசு கிறிஸ்துவை பழுதற்ற ஆட்டுக்குட்டியாக நமக்காக தந்தார்.

அதன் மூலமாக நாமெல்லாரையும் தம்முடைய சொந்த ஜனமாக ஏற்றுக்கொண்டார். அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.(யோவா 1 : 12) நாம் முதலாவது நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு, சொந்த இரட்சகராக இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போதுதான் நாம் அவர் ஜனங்களாக மாறுகிறோம். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறப்பதால், ஒழுங்காக ஆலயத்திற்கு போவதினால் மட்டும் அல்ல இயேசுவை நாம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது அவர் நம்மீது உள்ள பாவத்தின் கட்டுகளை சாபத்தின் கட்டுகளை அறுத்து இனி நம்மை ஒருவரும்அடிமை என்று கூறாதபடி நம்மை தம் சொந்த ஜனமாக ஏற்றுக்கொள்கிறார். பீல் ஆதிவாசி மக்கள் வில் அம்புகளை வைத்துக்கொண்டு திருடிக்கொள்ளையடித்து கொண்டிருக்கிறார்கள். சாராயத்தை காய்ச்சி குடித்துக்கொண்டிருந்தார்கள். இயேசுவை அறிந்துகொண்ட பின்பு பாவங்களை அறிக்கை செய்து சாராயம், பீடி போன்ற லாகிரி வஸ்துகளை விட்டு விட்டு இயேசுவை ரட்சகராக ஏற்றுக்கொள்ள முன்வந்தபோது தேவன் அவர்கள் மீதுள்ள கட்டுகளை அறுத்தார். நீங்கள் என் ஜனங்களாயிருப்பீர்கள் என வாக்குபண்ணி பல்லாயிரம் குடும்பங்களை தம் பக்கமாய் ஏற்றுக்கொண்டு நான் அவர்களுக்கு தேவனாக இருப்பேன் என்று வாக்குரைத்தார். ஆம் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கட்டுகள் அறுக்கப்பட்டு அவர் ஜனங்களாய் இருப்பது எத்தனை மகிழ்ச்சி.

**2. ஆரோக்கியம் தந்து காயங்களை ஆற்றுகிறார் :**

எரேமியா 30 : 17—ஐ வாசித்து பாருங்கள். அவர்கள்: உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளுண்டவன் என்று பேரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். தம் ஜனங்களாக தேவன் நம்மை நேசிக்கும்போது தேவன் தரும் ஆசீர்வாதங்களில் ஒன்று ஆரோக்கியம் தந்து காயங்களை ஆற்றுவது. இஸ்ரவேல் ஜனங்களை தேவன் மீட்டுக்கொண்டபின்பு மாரா என்ற இடத்திற்கு வந்தபோது கசப்பான தண்ணீர் கிடைத்ததின் நிமித்தம் முறுமுறுத்தார்கள். தேவன்

அதை மதுரமாக மாற்றினார். தேவ ஜனங்களுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை தந்தார். நானே உன் பரிகாரியான கர்த்தர் என்றார். (யாத் 15 : 26) நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன் என்று தன் ஜனங்களுக்கு தேவன் வாக்குபண்ணுகிறார். நம் பீல் விசுவாசிகளில் அநேகர் இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு எந்நாளும் சுகவீனம், நோய் என்று மருத்துவர்களையும், மந்திரவாதிகளையும் அணுகி கோழி, ஆடு, சாராயம் இவைகளுடன் தங்கள் பணத்தையும் ஏராளமாக செலவழித்தார்கள். இன்று கிறிஸ்துவின் பிள்ளைகளாக மாறியபின்பு என்ன ஆச்சரியம். கடந்த ஞாயிறு ஒரு தேவாலயத்தில் பங்குபெற்றபோது ஒரு விசுவாசி ஆச்சரியமாய் ஒரு நோய் வரவில்லை, மருந்துக்காக செலவழிக்கவில்லை என சந்தோஷமாக அனுபவித்து கூறுனார். வேதம் சொல்லுகிறது. தேவன் தாமே தம் ஜனங்களின் மீது வைத்த அன்பினால் தம்முடைய ஒரே பேரான குமாரனை சிலுவையில் பலியாக தந்து அன்பு கூர்ந்தார்.

ஏசாயா. 53: 4,5 சொல்லுகிறது. **"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்".** தேவன் நம்மை தம் ஜனங்களாக மாற்றும்போது அவர் நமக்கு தெய்வீக சுகத்தை கட்டளையிடுகிறார். ஆனால் அவர் ஜனங்களாகிய நாம் செய்ய வேண்டியது என்ன? யாத் 15 : 26–ல் வாசித்து பாருங்கள் "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தை கவனமாக கேட்டு அவர் பார்வைக்கு செம்மையானவைகளை செய்து அவர் கட்டளைகளுக்கு செவிகொடுத்து அவருடைய நியமங்கள் யாவையும் கைகொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்". நாமும் அவருடைய சொந்த ஜனங்களாய், அவர் நம் தேவனாக இருப்பதால் அவருக்கு கீழ்ப்படிவோம். "வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்" யாத் 23 : 25 வாக்கை சுதந்தரித்துக்கொள்வோம்.

**3. எல்லா ஆத்துமாக்களை நிரப்புகிறார்.**

எரேமியா 31 : 25–ஐ வாசித்து பாருங்கள். நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன். தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அருளும் மாபெரும் ஆசீர்வாதம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள். தம் ஜனங்களை

பாவ சாபங்களிலிருந்து மீட்டு, நோய்களை குணமாக்கி, காயங்களை ஆற்றுவது மட்டுமல்லாமல் ஆவிக்குரிய நன்மைகளால் நிரப்புகிறார். அவர் அப்படியே விட்டுவிடாமல் நான் என் நியாயப்பிரமானத்தை .......என்று கர்த்தர் சொல்லுகிறார். ''அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்கு பயப்படும்படிக்கும், நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியை கட்டளையிட்டு'' தேவன் தம் ஜனங்களுக்கு புதிய இருதயத்தை தந்து வேதத்தை தந்து அனுதினமும் ஆத்துமாவை போஷிக்கிறார். மட்டுமன்றி தம்முடைய பரிசுத்த ஆவியால் நம்மையும், நம் பிள்ளைகளையும் நிரப்புகிறார்.

நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். யோவேன் 2 : 28 கடைசி நாட்களில் தேவஜனங்களுக்காக தேவன் வைத்திருக்கும் உன்னதமான ஆசீர்வாதங்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும், ஆவிக்குரிய வரங்கள் மற்றும் தேவனோடு உறவாடும் உன்னதமான அனுபவங்களை நாம் பெற்றுக்கொள்ள விரும்புகிளார். ஏனெனில் நாம் அவருடைய ஜனங்களாயிருக்கிறோம். அவர் நம்முடைய தேவனாக இருக்கிறார். இப்புதிய வருடத்தில் நாம் வாஞ்சையுடன் ஆவிக்குரிய அனுபவங்களுக்காக ஜெபிப்போம். தேவன் நமக்கு கொடுக்கும் உன்னதமான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம். சபைகளில் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்படுவதாக. பரிசுத்த ஆவியானவரின் உன்னத பெலனுடன் சாட்சிகளாய் ஜீவிக்க, ஆத்தும ஆதாயம் செய்து அவர் வருகைக்கு ஆயத்தமாவோம்.

### 4. தம் ஜனங்களுக்கு தேவன் அளிக்கும் நன்மைகள்:

தேவன் தம்முடைய ஜனங்களை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் மட்டுமல்லாமல் இவ்வுலகத்தின் சகல ஆசீர்வாதங்களினாலும் நிரப்புகிறார். என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் (எரே 31 : 14) அவர்களை குறித்து சொன்ன எல்லா நன்மையையும் அவர்கள்மேல் வரப்பண்ணுவேன் (எரேமி 32 : 42). நான் அவர்களுக்குச் செய்யும் நன்மையையெல்லாம் கேட்கப்போகிற பூமியின் எல்லா ஜாதிகளுக்குமுன்பாக அது எனக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும், புகழ்ச்சியாயும் மகிமையாயும் இருக்கும்; நான் அவர்களுக்கு அருளிச்செய்யும் எல்லா நன்மையினிமித்தமும், எல்லா சமாதானத்தினிமித்தமும் இவர்கள் பயந்து நடுங்குவார்கள். (எரே.33 : 9)

நிச்சயமாகவே தேவன் தம்முடைய நாமம் தரிக்கப்பட்ட ஜனங்களுக்கு அருளிச்செய்யும் நன்மைகளை கண்டு தேவஜனங்கள் மட்டுமல்ல புறஜாதிகளும் கண்டு தேவனை மகிமைப்படுத்துவார்கள். எனக்கன்பானவர்களே “ நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்”. (எரேமி 30: 22) என்ற வாக்குத்தத்தத்தை பிடித்து குடும்பமாக ஜெபியுங்கள். நமக்கு தேவையான பொருளாதார நன்மைகள், நம் தேவையான வீடு, வாகனங்கள், பிள்ளைகளின் படிப்பு, மேற்படிப்பு, திருமண காரியங்கள், குழந்தை பாக்கியம், ஊழியப்பாதையில் ஆத்துமாக்கள், ஊழியத்தில் வளர்ச்சி, மட்டுமல்லாமல் நாம் கையிட்டு செய்யும் தொழில், நமக்கு தேவன் தந்த வேலைகளில் உயர்வை கட்டளையிட்டு நம்மை சகல நன்மைகளினால் நிரப்புவார்.

தேசத்தில் தேவஜனங்கள் உயர்த்தப்பட்டு ஆசீர்வாதமாக அமைவார்கள். ஆவியானவர் பீல் விசுவாசிகளை இப்படியாக ஆசீர்வதித்து உயர்த்துவேன் என்று வாக்குபண்ணியுள்ளார். இதை வாசிக்கும் என் அன்பு சகோதர சகோதரிகளே, தேவன் இப்படிப்பட்ட நன்மைகளால் தம் ஜனங்களை நிரப்ப ஆயத்தமாக இருக்கிறார். நாம் அவரை தேவனாக ஏற்று அவர் ஜனங்களாய் வாழ, ஒப்புக்கொடுப்போம்.

## நன்றி கூறுகிறோம்.....

*அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு,*

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள். பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் மற்றும் நமது விடுதி பிள்ளைகளுக்கும் கிறிஸ்துமஸ் ஆடைகள் மற்றும் அன்பளிப்புகள் வளங்குவதற்கான தேவைகளை தெரிவித்திருந்தோம். அந்த தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்த, உற்சாகத்துடன் கொடுத்த உங்கள் யாவருக்கும் மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் சந்திக்கப்பட வேண்டிய தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

# புதியவை அனைத்தும் புதியவை

**"இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" (வெளி. 21:5)**

ஒரு ஆண்டை கடந்து வந்து புதிய ஆண்டில் பிரவேசிக்க கர்த்தர் நமக்கு கிருபை அளித்ததற்காக முழு இருதயத்தோடு கர்த்தரைத் துதிப்போமாக. இன்று நாம் ஜீவனோடிருப்பது நமது பக்தியினாலும் அல்ல பெலத்தினாலும் அல்ல, வேறு எந்த சக்தியினாலும் அல்ல அவருடைய கிருபையால் மட்டுமே நிலை நிற்கிறோம்.

கடந்த ஆண்டில் நாம் சந்தித்த மேடு பள்ளங்கள், துன்பங்கள், துயரங்கள், கஷ்ட நஷ்டங்கள், வியாதியின் கொடூரங்கள், பிசாசின் எதிர்ப்புகள் அனைத்திலும் கர்த்தர் நமக்கு சகாயராயிருந்தபடியினால் இன்று பிழைத்திருக்கிறோம். கடந்த நாட்களில் கர்த்தர் நமக்கு இரங்கிச் செய்த அனைத்து நன்மைகளுக்காகவும் துதிஸ்தோத்திரம் ஏறெடுக்கவே இந்த புதிய ஆண்டின் நாட்கள் போதாது. துதிப்போம், துதிப்போம் கர்த்தரையே துதிப்போம்.

இந்த புதிய ஆண்டில் புதிய கிருபைகளையும், புதிய ஆசீர்வாதங்களையும், புதிய நம்பிக்கையையும் நமக்கு கர்த்தர் தருவார். சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்று வாக்குக் கொடுக்கிறார். புதியவைகளையே நினைத்துப் பேசவும், அவைகளை அடைந்திடவும் நம் மனம் நாடுகிறது. அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும் நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுதுபோக்குகிறதில்லை. (அப். 17:21)

கிறிஸ்மஸ் நாட்களில் புத்தாடைகள் அணிந்து கொள்வதிலும் மற்றவர்களுக்கு புதியவைகளை அன்பளிப்பாக கொடுப்பதிலும் நாம் அதிக மகிழ்ச்சி அடைந்தோம். புதிய ஆண்டின் முதல் நிமிடங்களை ஆலயத்தில் ஆரம்பித்து, அவர் பொற்பாதத்தில் அமர்ந்திருந்து புதிய தீர்மானங்கள் செய்திட கர்த்தர் உதவினார். தேவனுக்கே மகிமை! புதிய வீடு, புதிய கார், புதிய தொழில், புதிய பொருட்கள் பெறுவதிலேயே நம் மனம் குதுகலமடைகிறது. சரீரப்பிரகாரமாக புதியவைகளை பெறுவதில் இவ்வளவு மகிழ்ச்சிபெறுகின்ற நாம் ஆவிக்குரிய நிலையிலும் புதியவை பெறுதல் எத்தனை அவசியமாயிருக்கிறது.

***புதியபாடல் : (சங். 40: 1–3)***

சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்ற கர்த்தர் முதலாவது நம் வாழ்வில் சேற்றிலிருந்து தூக்கி எடுத்து கன்மலையின்மேல் நிறுத்தி, நம் அடிகளை உறுதிப்படுத்தி நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் நம் வாயிலே கொடுத்தார். அனலற்ற பழைய பல்லவியைப் பாடிக்கொண்டிருந்த நமக்கு அனல் பறக்கும் புதிய, புதிய பாடல்களைப் பாட கர்த்தர் உதவியுள்ளார். பாடலின் அர்த்தத்தைப் புரியாமல் எந்த ஆவிக்குரிய அனுபவமின்றி பாடிய நமது உதடுகள் இன்று முழு இரட்சிப்பின் அனுபவத்தோடு பாடுகின்றன. என்னே பேரானந்தம்!

***புதிய வாழ்வு : (எபேசியர் 4:22–24)***

முந்தின நடவடிக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய

மனுஷனை நீங்கள் களைந்து போட்டு உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள், பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின. பழைய சுவாசங்கள், முற்றிலும் ஒழிந்து புதிய நற்குணங்களோடு திகழ கர்த்தருடைய ஆவியானவர் உதவுகின்றார். நமக்குள் இயேசு சம்பாதித்துவைத்த இரட்சிப்பின் மகத்துவம் செயல்பட்டால் நம் நடை, உடை பாவனை, சொல், செயல், சிந்தை வாழ்வின் குறிக்கேள் யாவும் புதியவைகளாக மாறிவிடும். அந்த புதிய மாற்றத்தை நாம் பெற வேண்டியது மிகவும் அவசியம், உள்ளான மனுஷனால் ஏற்பட்டுள்ள உண்மையான மாற்றம் நிலைபெற்றிட நாளுக்கு நாள் புதிதாக்கப்பட வேண்டும்.

கர்த்தர் எனக்குத் தந்த ஒரு பாடலில் உள்ள சில வரிகள்:

“எந்தன் உள்ளத்தில் புது உணர்வு
என் வாழ்வினில் புது மலர்ச்சி
எந்தன் நடை உடை பாவனை சொல், செயலும்,
எந்தன் இயேசுவால் புதிதாயின”

***<u>புதிய உடன்படிக்கை : (1 கொரிந்தியர் 11:25)</u>***

கர்த்தர் நோவாவுடன் ஒரு உடன்படிக்கைபண்ணி ஆகாயத்தில் வானவில்லை நாட்டினார். தாம் தெரிந்துகொண்ட இஸ்ரவேலரோடு உடன்படிக்கை பண்ணினார். ஆனால் அவைகள் யாவும் பழையவைகளாயின. ஆனால் இயேசுகிறிஸ்து தம் ரத்தத்தைச் சிந்தி புது உடன்படிக்கையை வெளியிட்டார். அந்த உடன்படிக்கைதான் நம் பாவத்திற்கும், பாவத்தினால் வரும் தண்டனைக்கும் நாம் தப்பிட வழி உண்டாக்கிற்று. அந்த உடன்படிக்கையை என்றும் நினைவு கூர்ந்து என்றென்றும் நன்றியுள்ளவர்களாக கிறிஸ்துவின் சாட்சியாய் வாழ்வது நமது கடமையாகும்.

***<u>புதிய தரிசனம் : (யோவான் 4:35)</u>***

கர்த்ர் நம்மை அவருடைய சாட்சியாக வாழ அழைத்துள்ளார். மேலும் அவருடைய நற்செய்தியை அறிவிக்கும் தூதர்களாக நியமித்துள்ளார். நாம் நேரடியாக மிஷனெரி பணித்தளத்திற்கு செல்ல முடியாவிட்டாலும். அங்கு நடைபெறும் ஊழியத்தில் ஜெபத்தினாலும், உதாரத்துவமான காணிக்கைகளைக் கொடுப்பதினாலும் பங்குபெறலாம். இதற்கு தூரதரிசனம் தேவை. அதுவும் நாளுக்கு நாள் புதிய தரிசனம் நாம் பெறவேண்டும். அதற்கான ஆவிக்குரிய தெளிவாக காணும் கண்களை கர்த்தர் நமக்குத்தர கர்த்தரிடம் மன்றாடவேண்டும்.

கர்த்தர் எனக்குத் தந்த மற்றொரு பாடலில் உள்ள சில வரிகள்:

அருகினில் பார்த்தால் வறட்சிதான் தோன்றும்
தூரத்தில் பார்த்தால் விளைநிலம் தோன்றும்
தூரதரிசனம் நாம் பெறவேண்டும்
துரிதமாய் அருட்பணி செய்திடவேண்டும்

***<u>புதிய எருசலேம் : (வெளி. 21 : 1–3)</u>***

புதிய வானத்தையும் புதிய பூமியையும் நமக்காக உருவாக்கும் தேவன் புதிய எருசலேமில்

நித்திய காலமாக வாழ நம்மை அவரோடு சேர்க்க சீக்கிரம் வருகின்றார். ஆதலால் எப்பொழுதும் ஆயத்தமாயிருப்போமாக. நமக்குரியவர்களை ஆயத்தப்படுத்துவோமாக. வெறும் கையோடு இயேசுவை சந்திக்க நாம் செல்லாமல் ஏராளமான ஆத்தும கனிகளோடு மணவாளனாகிய இயேசுவை சந்திக்க ஆயத்தப்படுவோமாக. ஆத்தும வேட்டையில் இன்றே களம் இரங்குவோமாக.

***புதிய கனிகள் : (உன்னதப்பாட்டு 7:13)***

கனிகள் என்று சொல்லும்போது நமது தனிப்பட்ட வாழ்வில் வெளிப்படவேண்டிய ஆவியின் கனிகள் அவைகள். மற்றொன்று நாம் ஆதாயப்படுத்தும் ஆத்தும கனிகள் அந்த கனிகள் நாளுக்குநாள் புதியவைகளாக பெறவேண்டும். என்றைக்கோ நடந்த அற்புதங்களை காலம் முழுவதும் சொல்லி மழுப்பக்கூடாது. புதிய புதிய அற்புதங்களை வாழ்வில் பெற்று அனுபவிக்கவேண்டும். அத்துனை புதியவைகளும் இப்புத்தாண்டில் நீங்களும் உங்கள் வீட்டாரும் அனுதினமும் பெற்று மகிழ இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

J. அற்புதராஜ் மர்காஷிஸ்

---

## ஜெபக்குறிப்புகள்

கடந்த 2009–ம் ஆண்டு முழுவதும் தேவன் ஷாலோம் மிஷனெரி ஊழியங்களை நடத்திவந்தமைக்காக தேவனைத் துதியுங்கள். விசேஷித்த பாதுகாவலையும், கிருபைகளையும், தேவைகளையும் கொடுத்த ஆண்டவரைத் துதியுங்கள். தேவன் கொடுத்த ஊழியர்கள், சபைகள், ஆத்துமாக்கள், திட்டங்கள், ஆதரவாளர்கள் ஆகியோருக்காக தேவனைத் துதியுங்கள்.

**பீல் மக்கள்:**

2010–ம் ஆண்டில் நம் ஷாலோம் ஊழியத்தின் மூலமாக அநேக பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிக்கப்படவும், பீல் மக்கள் மத்தியில் தேவன் இன்னும் எழுப்புதலை கொடுக்கவும் ஜெபியுங்கள்.

**சுதேச ஊழியர்கள்:**

தேவன் நமக்கு கொடுத்த 435 சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்காகவும், அவர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காகவும், தேவன் அவர்களை இன்னும் வல்லமையாக பயன்படுத்தவும் ஜெபியுங்கள். அவர்களுடைய தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**சபைகள்:**

தேவன் நமக்கு கொடுத்த 500–க்கும் அதிகமான சபைகளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி கிரியை செய்யவும், சபையில் உள்ள மூப்பர்கள், விசுவாசிகள் அனைவரும் சாட்சியாக வளரவும் ஜெபியுங்கள். விசுவாசிகள் மூலமாக அநேகர் இரட்சிக்கப்படவும், அவர்கள் ஆத்தும அறுவடை செய்யவும் ஜெபியுங்கள்.

**Shalom Diocese in India**

பீல் சபைகளை ஒருங்கிணைத்து ஒரு Diocese–ஆக உருவாக்க கர்த்தர் உதவி செய்துள்ளார். மேலும் 77 சுதேச ஊழியர்களை போதகர்களாகவும் கர்த்தர் உருவாக்கியுள்ளார். சபை ஒருங்கிணைப்பு காரியங்கள், திட்டங்கள், ஊழியங்கள் திறம்பட செயல்பட ஜெபியுங்கள். Shalom Diocese–யை பரிசுத்த ஆவியானவர் நடத்திச் செல்ல ஜெபியுங்கள்.

**பீல் சிறு பிள்ளைகள்:**

தேவன் நமக்கு கொடுத்த சிறுபிள்ளைகளுக்காகவும், இந்த ஆண்டு அநேக சிறுபிள்ளைகள் இரட்சிக்கப்படும்படியாகவும், Sunday Class, CBC, Children Camp எல்லாம் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். குறிப்பாக பீல் மாணவர்கள் Hostel, School ஆசீர்வதிக்கப்படவும், இன்னும் விரிவாக்கப்படவும் ஜெபியுங்கள்.

**கூடுகைகள்:**

இந்த ஆண்டு நடைபெற உள்ள எல்லா கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். மாதந்தோறும் 4 பிரிவுகளாக நடைபெற உள்ள சுதேச ஊழியர்கள் கூடுகைகள், மூப்பர்கள் கூடுகை, பெண்கள் கூடுகைகள், மூத்த ஊழியர்கள் கூடுகைகள், ஆலோசனை கூடுகை, நற்செய்தி கூட்டங்கள், சிறுபிள்ளைகள் முகாம் புதிய ஊழியர்கள் பயிற்சி கூடுகைகள் ஆகியவைகள் அசீர்வதிக்கப்படவும், குறிப்பாக பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

**சகோ. தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்காக :**

தேவன் சகோ. தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களுக்கு **“ஒரு ஜாதி மக்களை உனக்கு கொடுப்பேன்”** என்று தரிசனம் கொடுத்து ஷாலோம் ஊழியங்களை நடத்தி வருகிறார். சகோ. தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களுக்காகவும், தேவன் அவர்களுக்கு நல்ல சுகம், பெலன் கொடுக்கும்படியாகவும், பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள். பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம். ஷெக்கினாவுக்காகவும் ஜெபியுங்கள்.

**Shalom Charity Mission**

பீல் ஆதிவாசி மக்களுடைய நல் வாழ்வுக்காக பல வழிகளில் செயல்பட்டு வருகிறோம். குறிப்பாக சிறுபிள்ளைகளின் கல்விப்பணி, முதியோர் கல்வித்திட்டம், ஆரம்ப சுகாதார கல்வி, கஷ்டப்பட்டவர்களுக்கு உதவி செய்து வருகிறோம். அதற்காகவும் Shalom Charity Mission–யை உருவாக்கி அதன் மூலமாக உதவி செய்துவருகிறோம். இன்னும் பல மக்கள் இதன்மூலமாக ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

**உடன் ஸ்தாபனங்கள்:**

தேவன் கிருபையாக நமக்கு பல திட்டங்களில் இணைந்து செயல்படும்படியாக கொடுத்த அனைத்து ஸ்தாபனங்களுக்காகவும், Campassion of India, (Caruna Bal Vikas) Seva Bharat, Consern, Bild, B.S.I, மற்றும் பல ஸ்தாபனங்களுக்காக ஜெபியுங்கள்.

**ஆதரவாளர்கள்:**

***-அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? (ரோமர் 10 : 15)*** ஷாலோம் ஊழியத்திற்காக ஜெபிக்கவும், கொடுக்கவும் தேவன் எழுப்பிய ஒவ்வொரு ஆதரவாளர்களுக்காக ஜெபியுங்கள். குறிப்பாக மிஷனெரி ஆதரவாளர்கள், கிராம ஆதரவாளர்கள், குழந்தை ஆதரவாளர்கள், பணித்தளத்தில் ஆலயம் கட்டிக்கொடுப்பவர்கள், Bible Project, மிஷனெரி பணிக்காக கொடுப்பவர்கள், அவ்வப்போது காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள், Board Members, ஷாலோம் பிரதிநிதிகளுக்காக ஜெபியுங்கள்.

**தலைமை அலுவலகம் :**

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் ஊழியம் செய்யும் தேவ பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.

✞ தலைமை அலுவலகத்தில் செயல்படும்

ஜெப ஊழியங்கள்,<br>
நிதி & கணக்கு வைப்பு ஊழியங்கள்,<br>
முன்னேற்றப்பணி ஊழியங்கள்,<br>
ஆதரவாளர்கள் தொடர்பு ஊழியங்கள்,<br>
நன்றிக் கடித ஊழியங்கள்,<br>
பத்திரிக்கை ஊழியங்கள்,<br>
மாத அறிக்கை ஊழியங்கள்,<br>
இ–மெயில் இன்டர்நெட் ஊழியங்கள்

இது தவிர இங்கு நடைபெறும் அனைத்து ஊழியங்களும் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்...

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் பரிசுத்த ஆவியானவருடைய ஆளுகைக்காக ஜெபியுங்கள்.

**பணித்தள அலுவலகத்திற்காக**

குஜராத்தில் இயங்கிவரும் நமது ஷாலோம் பணித்தள அலுவலகத்திற்காகவும், அங்கிருந்து ஊழியம் செய்துவரும் அனைத்து தேவ பிள்ளைகளுக்காவும், அவர்களது குடும்பத்திற்காகவும், அங்கு தேவனுடைய பாதுகாவல் இருக்கவும், ஜெபியுங்கள்.

**கிளை அலுவலகங்களுக்காக**

✞ சென்னையிலுள்ள ஷாலோம் கிளை அலுவலகத்திற்காகவும், அங்கிருந்து ஊழியம் செய்து வரும் சகோ. எபனேசர் அவர்களுக்காகவும் அவர்களது குடும்பத்திற்காகவும் தேவ பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.


✞ மார்த்தாண்டத்திலுள்ள ஷாலோம் கிளை அலுவலகத்திற்காகவும், அங்கிருந்து ஊழியம் செய்து வரும் சகோ. செல்வதுரை அவர்களுக்காகவும் அவர்களது குடும்பத்திற்காகவும் தேவ பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

## C.S.I. நல்மேய்ப்பர் ஆலயத்தின்

# 3ம் ஆண்டு நிறைவு ஸ்தோத்திர ஜெபக்கூட்டம்

இடம்
**C.S.I. நல்மேய்ப்பர் ஆலயம்**
திருவள்ளுவர் நகர்,
இராஜபாளையம்.

நாள்
**16,17. 01.2010,**
*சனி & ஞாயிறு*



நேரம்
**தினமும் மாலை**
**6.30 மணி**

தெய்வச் செய்தி

## *Rt. Rev. Dr. V. தேவதாஸ்*

## *Sis. வஹிதா தேவதாஸ்*

(ஷாலோம் ஊழியங்கள், குஜராத்)

*ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!*

தொடர்புக்கு : **சபை குரு & சபை மக்கள்,** போன் : 04563 – 232932

குறிப்பு : **17.01.2010 அன்று மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை நடைபெறும்.**

### *ஷாலோம் கிளை அலுவலகங்கள்*

| **சகோ. B. எபனேசர் டேனியல்,** | **சகோ. G. செல்வதுரை,** |
|---|---|
| New No. 15, Old No. 59,<br>பஜனை கோயில் தெரு,<br>சூளைமேடு, சென்னை – 600–094<br>செல் : 093444–75468 | **M.T.N.** பில்டிங்,<br>(மகளிர் காவல் நிலையம் அருகில்)<br>வடக்குத் தெரு, மார்த்தாண்டம்<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>செல் : 094876–89869 |

நமது தலைமுறையில் பீல் ஆதிவாசி ஜனங்கள்
தேவனை அறியும் பணியில் 2010-ம் ஆண்டிற்கான

## ஊழிய வளர்ச்சி திட்டங்கள்

- 1000 சுதேச ஊழியர்களை எழுப்பி பயிற்சி கொடுத்து உருவாக்குதல்.
- 1000 சபைகளை உருவாக்குதல்
- 1000 ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வியறிவுக்காக உதவுதல்
- 5000 வேத புத்தகங்களை 5000 விசுவாசக் குடும்பங்களுக்கு வழங்குதல்
- 300 புதிய சுதேச ஊழியர்களுக்கு சைக்கிள்கள் வழங்குதல்
- ஆவிக்குரிய பயிற்சி திட்டங்கள்.
- 10,000 மூப்பர்களுக்கு சிறப்பு முகாம்கள்
- புதிய சுதேச ஊழியர்களுக்காக 1 மாத பயிற்சி (40x12)
- மூத்த ஊழியர்களுக்கான B.Th., மற்றும் 1 வருட வேதபாட திட்டங்கள்.
- 3000 வாலிபர்களுக்கான முகாம்கள் நடத்துதல்
- 20,000 பிள்ளைகளுக்கு VBS பயிற்சி மற்றும் Sunday School பயிற்சிகள்
- பெண்கள் எழுப்புதல் முகாம்கள்
- மூத்த தலைவர்களுக்கான (ஊழியர்கள்) சிறப்பு பயிற்சி முகாம்கள்.
- நற்செய்தி கூட்டங்கள், எழுப்புதல் கூட்டங்கள் நடத்துதல்
- சுதேச ஊழியர்கள் குடும்ப அக்கினி முகாம்கள்.
- ஆவிக்குரிய புத்தகங்கள் மற்றும் பீலி மொழியில் ஆடியோ & வீடியோ வெளியிடுதல்.

மற்றும் பல

இதன் மூலமாக 1000 கிராமங்களில் 1000 ஸ்திர ஸ்தல சபைகளை உருவாக்கி குறைந்தது 3 லட்சம் ஆத்துமாக்களை கிறிஸ்துவண்டை வழிநடத்த வேண்டும் என்ற தரிசனத்துடன் செயல்படுகிறோம். வாருங்கள் எழுந்து கட்டுவோம்! ஜெபிப்போம் செயல்படுவோம்!

மேற்கண்ட பயிற்சிகளை ஒவ்வொருவருடமும் ஒவ்வொரு மாநிலத்திலும் அளிக்க வேண்டும். பயிற்சி கொடுக்கக்கூடிய முதன்மை பயிற்சியாளர்களை உருவாக்க வேண்டும். இவைகளை நடத்துவதற்கு இடவசதி, தங்கும் வசதி, உணவு வசதி, பிரயாணச் செலவுகள் மற்றும் தேவையான உபகரணங்கள் போன்ற காரியங்களுக்கு அதிகமான நிதிஉதவி தேவை.

சுதேச ஊழியர்களுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கிவிட்டு இவைகளை விட்டுவிட்டால் ஊழியங்கள் வளர முடியாது. தரிசனத்தை நிறைவேற்ற இயலாது.

தற்போது தேவன் தந்த 500 கிராமங்கள் திட்டத்தை நிறைவேற்ற மாதந்தோறும் சுமார் ரூ. 2,50,000/– தேவைப்படுகிறது. மிஷனெரிகளைத் தாங்க, ஆதிவாசி மாணவர்களைத் தாங்க, வேதபுத்தகங்கள், சைக்கிள்கள் வாங்க, மேலும் ஆலயங்கள் கட்டுவதற்குக்கூட தாராளமாக காணிக்கை அனுப்புவோர் ஏராளம். ஆனால் மேற்கண்ட பயிற்சி ஊழியங்களை நடத்தி ஊழியங்களை வளர செய்யவும், மேலும் தலைமை அலுவலகம், பணித்தள அலுவலக நிர்வாகத்திற்கான செலவுகளை பொறுப்பெடுக்க வரும் காணிக்கையோ மிகக் குறைவு. ஆகவே மாதந்தோறும்

**ரூ. 500/– கொடுத்து தாங்கக்கூடிய 500 கிராம ஊழிய ஆதரவாளர்கள்**

(அல்லது)

**ரூ. 1000/– மாதந்தோறும் கொடுத்துத் தாங்கக்கூடிய 250 ஷாலோம் ஊழிய பங்காளர்கள் (Shalom Mission Partners) தேவை.**

இதை வாசிக்கும் எனக்கு அன்பானவர்களே, நீங்கள் துரிதமாக இத்தேவையை சந்திக்க உதவுங்கள். ஒவ்வொரு பங்காளர்களும் குறைந்தது ஒரு கிராம ஊழிய ஆதரவாளர்களை அல்லது ஒரு மிஷனெரி ஊழிய பங்காளரையாவது அறிமுகப்படுத்தினால் தரிசனப் பணிளை விரைந்து செயல்படுத்த ஏதுவாக இருக்கும்.

## *NET TRANSFER* மூலமாக காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, **Internet** உதவியோடு **NET TRANSFER** மூலமாக காணிக்கை அனுப்பிய பின்பு உடனடியாக எங்களுக்கு காணிக்கை அனுப்பிய அனைத்து விபரங்களையும் ஈ–மெயில் மூலமாகவோ, எஸ்.எம்.எஸ். மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்த மிக அன்பாயக் கேட்கிறோம். நீங்கள் தெரிவிக்கத் தவறினால் காணிக்கை அனுப்பியது யார் என்பது தெரியாமல்கூட போக வாய்ப்புள்ளது. ஆகவே தயவு கூர்ந்து தகவல்களைத் தெரிவிக்க அன்பாய் கேட்கிறோம். இது எங்களுடைய கணக்கில் வரவு வைத்துக் கொள்ளவும், உங்களுக்கு ரசீது மற்றும் நன்றிக் கடிதம் உடனடியாக அனுப்பவும் ஏதுவாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**email : info@shalommission.in, Cell : 9345675468**

## பணித்தள சாட்சிகள்

தேவனுக்கே மகிமை

**சகோ. கரண் ரட்டுவா** **தாவா (குஜராத்)**

வேஸ்தா பேன் என்ற சகோதரிக்கு அநேக நாட்களாக காது கேட்காமல் இருந்தது, இதனால் இந்த சகோதரி மிகவும் வேதனைப்பட்டு வந்தாள். இந்த சூழ்நிலையில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டு ஆலயத்திற்கு வந்து ஜெபித்தார்கள். நானும் இந்த சகோதரிக்காக பாரத்துடன் ஜெபித்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு இந்த சகோதரியின் காதுகளைத் திறந்தார்.

**சகோ. ராம்சிங் டாமோர்** **லிம்பாகேடி (குஜராத்)**

ஜெய்திபாய் என்ற சகோதரர் ஒரு வருடமாக மனநிலை சரியில்லாமல் இருந்தார். மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் பலனில்லை. ஒருநாள் இந்த சகோதரன் இரவில் வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டார். அதனால் அவருடைய குடும்பத்தார் மிகவும் கவலையடைந்து அவரை தேடி கண்டுபிடித்து சங்கிலியில் கட்டி ஆலயத்திற்கு கூட்டி வந்தனர். அந்த சகோதரனுக்காக ஆலயத்தில் வைத்து விசுவாசத்துடன் ஜெபித்தோம். தேவன் ஜெபத்தைக் கேட்டு அந்த சகோதரனுக்கு நல்ல மனநிலையைத் தந்தார்.

**சகோ. ரனியா பாபோர்** **காபரியா (குஜராத்)**

ஜித்திரி பாய் என்ற சகோதரருக்கு வயிற்றில் கட்டி இருந்தது. எத்தனையோ மருத்துவமனைகளுக்கு சென்று மருத்துவம் செய்தும் குணமாகவில்லை. இறுதியாக அவர்கள் வீட்டிற்கு என்னை அழைத்து ஜெபிக்கும்படி கூறினார்கள். நானும் அந்த குடும்பத்துடன் சேர்ந்து விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் கட்டி மறை கிருபை செய்தார்.

**சகோ. ஹாவ்சிங் சங்காடா** **பரேவா (குஜராத்)**

சம்பூர்பாய் என்ற சகோதரன் பிசாசின் கட்டுகளில் இருந்தான். இதனால் இவனுக்கு ஒவ்வொரு வியாதியாக இருந்துகொண்டே இருந்தது. மருத்துவமனைக்குக் கொண்டு சென்று காண்பித்தபோது, ரூ. 30,000/—க்கும் அதிகமாக செலவானதே தவிர குணமாகவில்லை. பிறகு ஆலயத்திற்கு வந்து விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் அற்புதமான விடுதலை கொடுத்தார்.

**சகோ. ஸ்வர்மல் டாமோர்** **சங்கர்புரா (குஜராத்)**

காவஜி பாய் என்ற சகோதரர் பிசாசின் பிடியினால் மிகவும் பலவீனப்பட்டு இருந்தார். இதனால் குடும்பத்திலும் சமாதானம் இல்லை. மருத்துவமனைக்குச் சென்று மருத்துவம் பார்த்தும் சரியாகவில்லை. இறுதியாக ஜெபிக்க வந்தார்கள். இந்த சகோதரனுக்காக பாரத்துடன் ஜெபித்தபோது தேவன் ஜெபத்தைக் கேட்டு அற்புத விடுதலை தந்தார்.

**சகோ. பத்தியா டின்டோடு** **கால்கண்டுவி (ம.பி)**

பதனி என்ற சகோதரியின் காலில் பாம்புக் கடித்துவிட்டது. என்னிடம் ஜெபிக்க கொண்டு வந்தனர். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபித்தேன், ஜெபத்தைக் கேட்டு தேவன் பாம்பின் விஷத்திற்கு அந்த சகோதரியை தப்புவித்தார்.

**சகோ. ஹேம்தா சௌகான்** **தெல்வானி (ம.பி)**

இயேசுவை அறியாத ஒரு குடும்பத்தார் சபைக்குப் புதிதாக வந்தனர். அந்த குடும்பத்தார் திருமணமாகி எட்டு ஆண்டுகளாகியும் குழந்தை இல்லாமல் பெரும் துன்பங்களை அநுபவித்து வருவதாக கூறினர். நான் இயேசுவைப் பற்றிக் கூறி இவர்களுக்காக ஜெபித்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டார். தற்போது இந்த சகோதரி கர்ப்பிணியாக இருக்கிறாள்.

**சகோ. ராய்சிங் பாபோர்** **கேடா (ம.பி)**

கில்லா பேன் என்ற 17வயது சகோதரிக்கு கண் பார்வை மிகவும் குறைவாக இருந்தது. டாக்டரிடம் சென்றும் சரியாகவில்லை. பிறகு இயேசுகிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று ஜெபித்தாள். தேவன் ஜெபத்தைக் கேட்டு அற்புதமான பார்வையைக் கொடுத்தார்.

**சகோ. ராகேஷ் பாய்** **தேவ்கா (ம.பி)**

காளி என்ற சகோதரிக்கு நடக்கவும் நிற்கவும் முடியாத அளவிற்கு கால்களிலும், இடுப்பிலும் பயங்கரமான வலி இருந்தது. மேலும் வயிற்றில் ஒரு கட்டி இருந்து பயங்கர வேதனையைக் கொடுத்துவந்தது. மந்திரவாதிகளிடமும், மருத்துவர்களிடமும் சென்று குணமாகவில்லை. இறுதியாக இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு சபைக்கு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புதமான சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. ஹிம்ராஜ் பபோரியா** **கேடி (ம.பி)**

ஜாம்பு என்ற சகோதரனின் மகன் பிறந்ததிலிருந்தே நடக்க முடியாமல் முடவனாக இருந்தான். ஞாயிறு ஆராதனைக்கு இந்தக் குடும்பம் வர ஆரம்பித்து. அதிலிருந்து அந்த மகனுக்கு கால்கள் மற்றும் பாதங்கள் நேராக ஆரம்பித்தன. இப்போது தேவனுடைய பெரிதான கிருபையினால் மெதுவாக நடக்க ஆரம்பித்துள்ளான்.

**சகோ. தேவ்சிங் ஜமேர்** **அதர்சுபா (ம.பி)**

சுரேஷ் கேதா என்ற சகோதரருக்கு எதிராக வைக்கப்பட்டிருந்த செய்வினை காரணமாக அந்தசகோதரனின் கண்கள், கைகள் மற்றும் கால்களில் பயங்கரமான எரிச்சல் மற்றும் வலி இருந்துவந்தது. எவ்வளவோ பணம் செலவு செய்தும் குணமாகவில்லை. இறுதியாக நமது சபைக்கு வந்து இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக் கூறி ஜெபித்தவுடன் செய்வினை கட்டுகள் அகன்று நல்ல விடுதலை கிடைத்தது.

**இயேசு அழைக்கிறார்**

# சுகமளிக்கும் ஆராதனை



இடம்
**விக்டோரியா தொடக்கப்பள்ளி**
சத்திரம் பஸ் ஸ்டாப் அருகில்,
தூத்துக்குடி.

நாள்
**02.01.2010,**
*சனிக்கிழமை*

நேரம்
**மாலை 7.00 மணி**



தெ[illegible]ய்தி

## *Rt. Rev. Dr. V. தேவதாஸ்*

ஷாலோம் ஊழியங்கள், குஜராத்.

**இந்த சுகமளிக்கும் ஆராதனைக்காக ஜெபியுங்கள்,**
**யாவரும் தவறாமல் பங்கு பெறுங்கள்**

தொடர்புக்கு : இயேசு அழைக்கிறார் ஜெப மையம், தூத்துக்குடி.
**Ph : 2377577, 98430 - 39220, 94431 62710**

---

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

இடம்
**ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

நாள்
**16.01.2010, சனிக்கிழமை**

நேரம்
**மாலை 5.00 மணி**
**முதல் 7.00 மணி வரை**

சிறப்பு செய்தி

***Rev. P. ஆமோஸ்*** A.G. Church மார்த்தாண்டம்

---

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும்,*
*தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

---


தொடர்புக்கு:-

| | |
|---|---|
| **சகோ. செல்வதுரை,** | **Cell : 94876-89869,** |
| **சகோ. ஜார்ஜ்,** | **Cell : 9487689869,** |
| **சகோ. கிங்பெர்ட்,** | **Cell : 94868-64820** |

## சுதேச ஊழியர் சாட்சி

## சகோ. ஹுக்கியா டாமோர்

### மத்தியப்பிரதேசம்




என்னுடைய பெயர் **ஹுக்கியா டாமோர்.** நான் மத்தியப்பிரதேசம் மாநிலம், ஜாபுவா மாவட்டத்திலுள்ள சஜேலி கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசுவை அறியாததற்கு முன்பு விக்கிரக ஆராதனை செய்யக்கூடியவனாகவும், அடிதடி சண்டைபோட்டு, சாராயம் குடித்து கெட்டவார்த்தை பேசி பலவிதமான பாவங்களை செய்து வந்தேன். ஒரு வேலையும் செய்யாமல் சகோதரர்களுடன் சண்டைபோடுகிறதே என்னுடைய வேலையாக கொண்டிருந்தேன். இப்படி நான் மிகவும் கெட்டவனாக வாழ்ந்துகொண்டிருந்த வேளையில் திடீரென்று நானும், எனது மனைவியும் பயங்கரமான நோயினால் பாதிக்கப்பட்டு கட்டப்பட்டு இருந்தோம். மருத்துவமனைக்குச் சென்று எவ்வளவோ மருந்துகள் சாப்பிட்டும் சரியாகவில்லை. என்னுடைய கிராமத்தில் சில மக்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு சபைக்கு சென்றார்கள். இந்நிலையில் இயேசு நோய்களை சுகமாக்குவார், பேய்கள் விலகி ஓடும் என்று கேள்விப்பட்டு நானும், என் மனைவியும் சபைக்குச் சென்றோம். அப்போது **ஷாலோம் ஊழியர் குல்லா டாமோர்** எங்களுக்காக ஜெபித்தார். உடனே இயேசு எங்களை தொட்டு சுகமாக்கினார். 2004–ம் வருடம் இயேசுவை ஏற்றுக்கொண்டோம். 2007–ம் வருடம் ஞானஸ்நானம் பெற்றேன். எங்கள் கிராமத்தில் அநேகர் இயேசுவை அறியாமல் பாவத்திலும், நோயிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இயேசுவைப்பற்றி கூறவேண்டும் என்ற வாஞ்சையினால் என்னுடைய வாழ்க்கையை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : ***Mr. Maltan Jeevan, Chennai.***

# இசபெல் கூன்

## மிஷனெரி முன்னோடிகள்



**இசபெல் கூன்** (Isobel Selina Miller Kuhu) **1901**ஆம் ஆண்டு டிசம்பர் **17**ம் நாள் கனடாவிலுள்ள டொரன்டோ (Toronto), என்னுமிடத்திலுள்ள ஒன்டாரியோவில் (Ontario) பிறந்தார். பின்பு இக்குடும்பம் வேன்கூவர் (Vencouver, Birtish, Columbia) என்ற இடத்திற்கு இடம் பெயர்ந்தனர். அப்பொழுது இசபெல்லுக்கு **11** வயது. வீட்டில் செல்லமாக பெல் (Bell) என்று அழைத்தார்கள். இவரது தகப்பனார் ஒரு வியாபாரி. அதோடு பிரஸ்பிடேரியன் (Presbyterian) சபையில் ஒரு பிரசங்கியாராகவும் இருந்தார். இவரது தாயார் ஆலய ஆராதனையில் இசைக்கருவி இசைத்து பாடல்கள் பாடி நடத்துவார்கள். இசபெல் சிறு வயதிலேயே பக்தியுடன் வளர்க்கப்பட்டாள். தினசரி தேவைக்காக நாம் ஜெபிக்கவேண்டும் என்பதை தன் பெற்றோரிடம் பெல் கற்றிருந்தாள். பார்ப்பதற்கு அழகாகவும், படிப்பிலும் சிறந்து விளங்கினார். உயர்நிலை படிப்பில் மாநிலத்திலேயே முதல் மாணவியாக தேர்ச்சியடைந்து கவர்னரிடம் விருது பெற்றாள்.

வாலிப வயதை எட்டியபோது கல்லூரி நிகழ்ச்சிகளில் நடனமாடுவது, விடுமுறை நாட்களில் இரவில் நடனமாடச் சென்றுவிட்டு வெகுநேரம் கழித்து வீட்டிற்கு வருவாள். இவ்விதமான உல்லாசமான வாழ்க்கைக்கு நேராக சென்றுவிட்டாள். தாயார் கண்டித்தபோது, அதில் என்ன தவறு இருக்கிறது? நான் நன்றாகத்தானே படிக்கிறேன் என்று சமாதானம் கூறுவாள். பெல் படிப்பிலும் நடனத்திலும் பல விருதுகளைப் பெற்றாள். கல்லூரி வாழ்வில் விசுவாச வாழ்வை விட்டு முற்றிலும் விலகி கடவுள் என ஒருவர் இல்லை எனவும் வேதம் தற்கால விஞ்ஞானத்திலிருந்து வேறுபட்டது எனவும் நம்ப ஆரம்பித்தாள். இச்சமயத்தில் ஒரு வாலிபனால் ஏமாற்றப்பட்டாள். சமாதானத்தை இழந்த **19** வயதான பெல்லுக்கு உலகமே இருண்டதுபோல இருந்தது. அதிக மனவேதனையுடன் சாப்பிடாமல் தூங்க முடியாமல் இருந்த அவளுக்கு விஷம் குடித்து உயிரை மாயத்துக்கொள்ளும் எண்ணம் வந்தது. இந்த மனப்போராட்டத்தில் தன் கையை வானத்துக்கு நேராக உயர்த்தி, **"ஓ தேவனே, நீர் அங்கே இருப்பீரானால் எனக்கு நிரூபியும், இந்த படுவேதனையில் எனக்கு சமாதானம் தாரும். என் வாழ்க்கையை உமக்குக் கொடுக்கிறேன். எது வேண்டுமானாலும் செய்வேன். எங்கு வேண்டுமானாலும் செல்வேன்"** என்று சொல்லிவிட்டு படுத்துக் கொண்டாள். அமைதியான தூக்கம் அவளை சூழ்ந்து கொண்டது. மறுநாளில் தூசி படிந்திருந்த தனது வேதாகமத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள். பெல்லின் தாயும் அவளது மாற்றத்தை உணர்ந்து, வேதபாட வகுப்புக்கு கூட்டிச் சென்றார். அந்த வேதபாட வகுப்பின் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டாள்.

அவளுடைய ஆவிக்குரிய வளர்ச்சி மெதுவாகவே இருந்தது. **1922**ஆம் ஆண்டு பல்கலைக் கழக படிப்பை முடித்து (University of British Columbia) ஆசிரியர் பயிற்சி பெற்று, பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றினாள். தேவனிடத்தில் தான் செய்த உடன்படிக்கையை மறக்கவில்லை.

பெர்ஸ் (Pers) என்ற இடத்தில் நடந்த மிஷனெரி மாநாட்டில் கலந்து கொண்டாள். அங்கு சீனாவில் திபெத்—பர்மா லிசு மக்கள் (Tibeto - Burman Lisu People) மத்தியில் மிஷனெரியாக சென்றிருந்த ஜேம்ஸ் பிரேஸர் (James O Frasier) பகிர்ந்து கொள்ளுதலின் மூலமாக லிசு மக்களைப் பற்றி அறிந்து கொண்டு, சீன தேசத்திற்கு மிஷனெரியாகச் சென்று லிசு மகக்களுக்காக உழைக்கப் உந்தப்பட்டாள். சீன உள்நாட்டு இயக்கத்தின் ஸ்தாபகர் ஹட்சன் டெய்லர் (Hudson Taylor) வாழ்க்கை சரிதையும் அவளை வெகுவாய் கவர்ந்தது. சீன தேசத்திற்கு மிஷனெரியாக செல்லும் முடிவை தன் தாயிடம் தெரிவித்தபோது, தாய் அதிர்ந்துபோய் **"அப்படி செல்வதானால் என் சடலத்தின் மீது நடந்துதான் நீ செல்ல வேண்டும்"** என்று கூறிவிட்டார். தந்தையும் இதைப்பற்றி இனி பேசக்கூடாதென்று கண்டிப்பாக கூறிவிட்டார். மிஷனெரிகளுக்காகவும் அழியும் ஆத்துமாக்களுக்காகவும் ஜெபிக்கக் கற்றுக் கொடுத்த தாயா இப்படி சொல்கிறாள்? என பெல் குழப்பமடைந்தாள். என்றாலும் எல்லாவற்றிற்காகவும் ஜெபிக்க ஆரம்பித்தாள். இந்த வேளையில் பெல்லின் தாய் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு மரித்துப்போனார்கள். அவர் மரிக்கும் முன் தனது சிநேகிதியிடம் **"என் மகள் தெரிந்து கொண்ட பணி சிறந்த பணியே"** என்று சொல்லி விட்டு சென்றார். இதைக் கேட்ட பெல்லின் உள்ளம் உற்சாகமடைந்தது. தனது சகோதரனுக்கும் ஒரு நல்ல வேலை கிடைத்தது. தன் தந்தையின் வழக்கிலிருந்தும் விடுதலை கிடைத்தது. 1926ல் சீன தேசத்திற்கு மிஷனெரியாகச் சென்றிந்த ஜாண் என்பவருக்கும் பெல்லுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

1928ஆம் ஆண்டு அக்டோபர் 11ம் நாள் பெல் சீனாவிற்குப் புறப்பட்டாள். சீன தேசத்தை அடைந்ததும் நவம்பர் 4ஆம் தேதி ஜாண் கூனுக்கும் (John Kuhn) பெல்லுக்கும் சீன தேசத்தில் திருமணம் நடந்தது. சீன மக்களின் பழக்கங்களை கற்றுக்கொண்டு ஏழை மக்களோடு வாழ்ந்து அவர்களோடு பழகவும், அவர்கள் கொடுக்கும் உணவை சாப்பிடவும் கற்றுக்கொண்டாள். பகலில் வீடுகள் சந்திப்பதிலும், மாலை வேளைகளில் திறந்தவெளி பிரசங்கம் செய்தும் வந்தார்கள். சீனமொழியை நன்கு கற்றுக்கொண்டபின் லிசு (Lisu) மக்கள் வாழும் பகுதிக்கு மாற்றப்பட்டு, அங்கு ஊழியம் செய்து வந்தார்கள் 1931ல் சீனாவிற்கும் ஜப்பானுக்கும் போர் மூண்டதால் சிலகாலம் ஹாங்காங்கில் (Hong Kong) தங்கிவிட்டு மீண்டும் லிசு மக்கள் மத்தியில் வந்து ஊழியம் செய்தார்கள். கொடூர குணமுடைய லிசு மக்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டதால் மாற்றமடைந்தார்கள். எப்சிபா (Hephzibah) என்ற வேதாகமப்பள்ளி ஒன்றை ஆரம்பித்து அதில் வேத பாட வகுப்புகளை நடத்தினார்கள். கம்யூனிச ஆட்சி பரவ ஆரம்பித்தபோது, 1951ல் சீன உள்நாட்டு மிஷன் அனைத்து மிஷனெரிகளையும் சீனாவை விட்டு வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டது. பெல் தம்பதியர் தாய்நாடு செல்ல மனமின்றி தாய்லாந்தில் குடியேறி, அங்குள்ள லிசு, லாகூ, ஆக்கா போன்ற மக்கள் மத்தியில் சுவிசேஷத்தை அறிவித்து ஊழியம் செய்தனர். இவரது மகள் கேத்ரினும் மிஷனெரியாக சென்றாள். அதனைக் கண்டு பெல் தம்பதியார் தேவனைத் துதித்தார்கள்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இசபெல் கூன் 1957ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் நாள் தேவனுடை சமூகத்தை சென்றடைந்தாள். வீட்டன் ஆலயத்தில் (Wheaton College Church) நல்லடக்கம் செய்யப்பட்டது. கடைசியாக தன் கணவனிடம் **"மோட்சத்தின் பொன் மதில்களுக்கு வெளியே என் தலையை நீட்டி லிசு சபையை நான் பார்த்துக்கொண்டிருப்பேன்"** என்று கூறினார்.

# SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்


தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 18 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **"கல்வி அறிவு வளர்ச்சி"** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளை கருத்தாக திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும். ஆகவே Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission** – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்

வங்கி கணக்கு எண் : **105010100096779**
**SHALOM CHARITY MISSION - Axis Bank - Tuticorin Branch**

# சந்தாவைப் பற்றி



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காக அனுப்பப்படுகிறது.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2009) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/–  ஆயுள் சந்தா : ரூ.600/–**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **சுனில் டாமோர்** |
| தகப்பனார் பெயர் | : | கல்லா டாமோர் |
| தாயார் பெயர் | : | ரூப்பா டாமோர் |
| பிறந்த நாள் | : | 06.07.1998 |
| படிக்கும் வகுப்பு | : | 7th Std., |
| சொந்த ஊரின் பெயர் | : | அம்பாபாடா |
| மாவட்டம் | : | குசல்கட் |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |

**மாணவனின் குடும்பத்தைப் பற்றி சில வரிகள்:–**

சுனில் டாமோரின் குடும்பம் கிறிஸ்துவை அறியாதவர்களாய் இருந்தார்கள். இவனது பாட்டிக்கு பக்கவாத நோய் வந்து 20 வருஷமாக படுத்த படுக்கையாக இருந்தார்கள். சகோ. தேவதாஸ், சகோதரி. வஹிதாவும் ஜாலோத்தில் குடியிருந்து ஜெபக்கூட்டம் நடத்திவந்தார்கள். அந்த நாட்களில் இவனது பாட்டியை 4 பேர்கள் கட்டிலோடு தூக்கிக் கொண்டுபோய் ஜெபிக்கும்படி கூறினார்கள். அவர்கள் ஜெபித்த 8 நாட்களுக்குள் இவனது பாட்டி பரிபூரண சுகமடைந்தார்கள். தேவன் செய்த இந்த பெரிய அற்புதத்தினால் இந்தக் குடும்பத்திலுள்ள அனைவரும் இயேசுவை ஜீவனுள்ள தேவன் என்று ஏற்றுக்கொண்டார்கள். இதன்பின் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக சுதேச ஊழியர் காவ்ஜி கட்டாரா –வின் சபைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். இதன்பின் சுனில் டாமோரின் தந்தை ஊழியம் செய்வதற்காக தேவனால் அழைக்கப்பட்டார். அதைத்தொடர்ந்து ஷாலோமில் இணைந்து குடும்பமாக ஊழியம் செய்து வருகிறார்கள். இப்பொழுது 25 குடும்பங்கள் சபையில் உள்ளன.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** நன்றாக படிப்பான், உற்சாகமான மாணவன்.

**ஜெபியுங்கள்:-** நல்ல முறையில் படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும், குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர்** **Mr. J. Lawrence,** Hosur.

**நீங்களும் மாதம் ரூ. 400/– கொடுத்து ஜெபித்துத் தாங்க முன் வரலாம்.**
**உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.**

## ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- மாதந்தோறும் ரூ.2000/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- மாதந்தோறும் ரூ.1000/- கொடுத்து Shalom Mission Partner-ஆக முன் வரலாம்.
- மாதம் ரூ.500/- கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- மாதம் ரூ.400/- கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம். (ஒரு ஆண்டிற்கு ரூ. 4,800/–)
- ரூ.60,000/- கொடுத்து ஒரு கிராம ஆலயத்தைக் கட்டிக் கொடுக்கலாம்.
- மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- பீல் சுதேச ஊழியர்களுக்கு ரூ.2,500/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ரூ.80/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம். (5550 வேதப்புத்தகங்கள் தேவை)
- அனுதினமும் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக மறவாமல் ஜெபியுங்கள்.
- மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

## நாட்டு நடப்புச் செய்திகள்....

பிரேசில் நாட்டில் இபோடிரமான என்ற நகரைச் சேர்ந்த 2 வயது குழந்தையின் உடலில் 42 தையல் ஊசிகளை செலுத்திய கொடூர மனிதன் கைது செய்யப்பட்டுள்ளான். குழந்தையின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்தக் குழந்தையின் தாயார் மரியா டிசோசா, கடந்த சில நாட்கள் கடும் வலியாயல் துடித்த குழந்தையை மருத்துவமனைக்குக் தூக்கிச் சென்றார். மருத்துவமனையில் ஸ்கேன் செய்து பார்த்ததில் 42 ஊசிகள் தெந்தன. இதில் 2 ஊசிகள் குழந்தையின் இருதயம் அருகே அபாயகரமாக உள்ளன. மற்றவை கழுத்து, அடிவயிறு, நுரையீரல்கள், கால்கள் ஆகியவற்றில் உள்ளன. இந்த ஊசிகளை அகற்றி குழந்தையின் உயிரைக் காப்பாற்ற மருத்துவர்கள் போராடி வருகின்றனர்.

---

தெலங்கானா தனி மாநில பிரசச்னை நீடிப்பதால் ஆந்திர தொழில் துறைக்கு தினமும் சுமார் ரூ. 150 கோடி நஷ்டம் ஏற்படுவதாக தெரிய வந்துள்ளது. ராஷ்டிரிய சமிதி கட்சித் தலைவர் சந்திரசேகர ராவ், மேற்கொண்ட போராட்டத்தை அடுத்து தனி தெலங்கானா மாநிலம் அமைக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது. ஆனால் ஒன்றுபட்ட ஆந்திராவை பிரிக்கக்கூடாது என்று ஆளும் காங்கிரஸ் உட்பட பல கட்சி எம்.பி.க்கள். எம்.எல்.ஏ.க்கள் மாநில அமைச்சர்கள் போராட்டத்தில் குதித்தனர். பலர் ராஜினாமா செய்தனர். இதனால் ஆந்திரா மாநிலம் முழுவதும் பதட்ட நிலை நீடிக்கிறது. தினமும் பந்த், பேரணி, போராட்டம் என பல்வேறு கட்சிகள் நடத்தி வருவதால் ஆந்திராவில் இயல்பு வாழ்க்கைப் பாதிக்கப்பட்டுள்ளது.

---

உலகின் டாப் 10 தனிநபர் உற்பத்தி கொண்ட நாடுகள் பட்டியல் வெளியாகி உள்ளது. அதில் சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா நாடுகள் இடையே உள்ள மிகக் குட்டி நாடான லீச்டென்ஸ்டீன் முதலிடம் பிடித்துள்ளது. அமெரிக்காவிற்கு 10வது இடமே கிடைத்துள்ளது. லீச்டென்ஸ்டீன் நாட்டில் மக்களின் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 55.46 லட்சம். அங்கு இயற்கை வளம் குறைவு என்பதால் தொழிற்சாலைகள் மிக அதிகம். அதாவது மகக்ளின் எண்ணிக்கையை விட தொழிற்சாலைகள் அதிகம்.


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

<u>தலைமை அலுவலகம்</u>

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

Rt. Rev. Dr. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

**கிராம ஆலயம்** **அந்தர்வேலியா** **மத்தியப்பிரதேசம்**



அந்தர்வேலியா என்பது மத்தியபிரதேசம் ஜாபூவா மாவட்டத்திலுள்ள ஒரு கிராமமாகும். பயங்கரமான கொள்ளைக்காரர்களுக்கும், திருடர்களுக்கும், மந்திரவாதிகளுக்கும் பஞ்சமில்லாத கிராமம் இது. இக்கிராம மக்கள் அந்தகாரத்திற்குள் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் இயேசுவைத் தேடி தாகோத் கூட்டங்களில் வந்து கலந்து கொண்டார்கள். இயேசுவின் மீது இவர்கள் வைத்த விசுவாசத்தையும் சுவிசேஷத்தின் மீது அவர்கள் கொண்ட தாகத்தையும் கண்டு சகோ. ராஜேஷ்பாய் அப்பகுதியில் ஊழியம் செய்யும்படி சென்றார். சகோ. பூர்சன்பாய் என்பவரின் முழுக்குடும்பமும் பிசாசு பிடியில் சிக்குண்டு விடுவிப்பாரில்லாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. அக்குடும்பத்திற்கு இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபித்தபோது தேவன் அனைத்து பிசாசின் கட்டுகளிருந்தும் பூரண விடுதலையைக் கொடுத்தார். இயேசு கொடுத்த இனிய வாழ்வை, இன்னல் துவழும் தன் ஜனங்களுக்கும் காண்பிக்க வேண்டும் என்று உந்தப்பட்டு தேவ ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணம் செய்து அப்பகுதிகளில் ஊழியம் செய்துவருகிறார். தேவன் கொடுத்த திறந்த வாசனால் அநேக ஜனங்கள் ஆண்டவரைத் தேடி வந்தார்கள். ஆண்டவரை ஆராதிக்க ஆலயம் அவசியம் என்பதை உணர்ந்த சகோ. பூர்சன்பாய் தன் நிலத்தை காணிக்கையாகத் தந்தார். எதிர்ப்புகள் பல வந்தபோதும் என்றும் மாறாத தேவன் அழகான கிராம ஆலயத்தினைக் கட்டி முடிக்க கிருபை செய்தார். இந்த ஆலயத்தினை 1996ஆம் ஆண்டு கட்டப்பட்டது. ஆனால் பல எதிர்ப்புகள் நிமித்தம் 2005ம் ஆண்டு இடிக்கப்பட்டது. சபை மக்கள் பாரத்தோடு ஜெபித்தார்கள். தேவன் ஜெபத்தைக் கேட்டு பெரிய ஆலயம் ஒன்று கட்ட கிருபை தந்தார்.

இந்த கிராம ஆலயம், இயேசு விடுவிக்கிறார் கிராம ஆலயத் திட்டம் – 2009 ன் மூலம் வழங்கப்பட்ட நிதி உதவி ரூ. 3 லட்சம் மூலம் கட்டப்பட்டு 08.11.2009 அன்று இயேசு விடுவிக்கிறார் குழுவினர்கள் மூலம் தேவனுடைய நாம மகிமைக்காக பிரதிஷ்டை

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# HAPPY NEW YEAR 2010

*God who crown the year with
His goodness may grant you
special grace and blessings and
We wish you all a blessed and prosperous*

## NEW YEAR



**Rt. Rev. Dr. V. Devadass & Family,**
**Shalom Pastors & Bhil Evangelists**
**Office Staff of Shalom**

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss